

# கழக
# மகளிர் கருத்தரங்கம்

தலைவர் கலைஞர்

# கழக
# மகளிர் கருத்தரங்கம்

தலைவர் **கலைஞர்**

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

வெளியீடு:
**திராவிட முன்னேற்றக் கழகம்**
''அண்ணா அறிவாலயம்''
367 – 379, அண்ணா சாலை,
சென்னை – 600 018.

முதற்பதிப்பு : டிசம்பர் 2002

விலை : ரூ.5/-

18252

அச்சிட்டோர் : சில்வர் ஸ்டிரிக்ஸ்
பீட்டர்ஸ் சாலை,
சென்னை-14.



# கழக மகளிர் கருத்தரங்கம்

## (1)

பெண்ணுரிமைக்காக பாரதியார் முழங்கியிருக்கலாம். பாவேந்தர் முரசு கொட்டியிருக்கலாம். ஆனால் இவர்களையும் மற்ற மற்ற கவிஞர்களையும் தலைவர்களையும் விட; அவர்களின் கருத்துக்களுக்கெல்லாம் மாறுபட்ட கருத்து ஒன்றினை மகளிர் குல முன்னேற்றத்திற்காகவும் – அவர்களின் உரிமைகள் தங்கு தடையின்றி பெருகி விடுதலை பெறுவதற்காகவும் **1928**ஆம் ஆண்டிலேயே 'குடியரசு' இதழிலே எழுதிய தலையங்கத்தின் வாயிலாக, தந்தை பெரியார் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அக்கருத்து ஆணித்தரமானது! அது வருமாறு :–

"பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அனேக இடங்களில் அநேக சங்கங்களும், முயற்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம்முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலை உள்ளவர்கள் போலக் காட்டிக் கொண்டு, மிகப் பாசாங்கு செய்து வருகின்றார்கள். ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும்– எவ்வழியிலும் – பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது. தற்காலம் பெண்கள் விடுதலைக்காகப்

பெண்மக்களால் முயற்சிக்கப்படும் இயக்கங்களும் யாதொரு பலனையும் கொடுக்காமல் போவதல்லாமல், மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத் தனத்திற்கே கட்டுப்பாடுகளைப் பலப்படுத்திக் கொண்டே போகும் என்பது நமது அபிப்பிராயம்.

அன்றியும் ஆண்கள், பெண்களின் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெற முடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனர் அல்லாதவர்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருகால் ஏதாவது ஒரு சமயம் மேற்படி விஷயங்களில் விடுதலை உண்டாகிவிட்டாலும் கூட, ஆண்களால்

பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம்.

ஏனெனில், 'ஆண்மை' என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைப் பெண்கள் மறந்து விடக்கூடாது. அந்த 'ஆண்மை' உலகில் உள்ளவரையிலும் பெண்மைக்கு மதிப்பு இல்லை என்பதைப் பெண்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உலகத்தில் 'ஆண்மை' நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தே வரும். பெண்களால் 'ஆண்மை' என்ற தத்துவம் அழிக்கப் பட்டாலல்லது 'பெண்மை' விடுதலையில்லை யென்பது உறுதி. 'ஆண்மை'யால்தான் பெண்கள் அடிமையாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சுதந்திரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் 'ஆண்மை'க்குத்தான் உரியதாக்கப் பட்டுவிட்டன, ஏன்? 'ஆண்மை'க்குத்தான் அவைகள் உண்டு என்று ஆண் மக்கள் முடிவு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதைமாத்திரம் பெண்கள் நன்றாய் உணர வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகின்றோம்."

பெரியார் அவர்கள் திட்டவட்டமாக, அழுத்தம் திருத்தமாக 'குடியரசு' பத்திரிகையில் தலையங்கமாகவே

தீட்டிய இந்தப் புரட்சிகரமான கருத்து வெளிப்படுவதற்குக் காரணமே; ஏதோ ஆண்களால்தான் பெண்களின் பாதுகாப்பு பேணப்பட வேண்டும் – அவர்களால்தான் பெண்களுக்காகக் குரல் கொடுக்க முடியும் என்ற ஆண்களின் ஆணவச் சிந்தனைதான்!

இதை எடுத்துக்காட்டுவது போல மகளிர் அமைப்பு ஒன்றை நிறுவுவதாக இருந்தாலும், பெண்கள் மாநாடு ஒன்றை நடத்துவதாக இருந்தாலும்; எப்படியோ எந்த வகையிலோ அதற்கு ஆண்கள்தான் முன் நிற்பது என்பது அந்தக் காலத்திலேயே தோன்றிவிட்ட ஒரு தொற்றுநோயாக அமைந்து விட்டது.

இப்போது கூட கழக மகளிர் கருத்தரங்கினை அறிவித்து அதில் கலந்துகொள்ள மகளிர்க்கு அழைப்பு விடுத்திருப்பவர் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள்தான்! கருத்தரங்கமும் என் தலைமையில்தான் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது! இது எப்படியிருக்கிறதென்றால்; “பெண்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் ஆண்கள் எதுவும் செய்துவிட முடியாது – ஆண்களை நம்பிப் பயனில்லை” என்பதைக் கூட தந்தை பெரியார்தான்; (ஆம், ஒரு ஆண் தான்) சொல்ல வேண்டியிருந்தது என்பதைப் போல, நானும் பேராசிரியரும் கலந்து கொள்ளும் இந்தக் கழக மகளிர் கருத்தரங்கு இப்போது கூடுகிறது என்றாலுங்கூட, எதிர்காலத்தில் கழக மகளிர் அணி, தனித்தியங்கும் வலிமை பெற்று – உரிமை பெற்று – கழகத்திற்குத் துணை அணி களில் ஒன்றாக – இளைஞர் அணி போல, தொழிலாளர் அணி போல –

இன்றுள்ளதைக் காட்டிலும் மேலும் சீரும் சிறப்பும் பெற்று வலிமை வாய்ந்த அணியாக வளர்ச்சியுற வேண்டுமென் பதற்காகவே கூட்டப் பெறுகிறது என்பதை மறந்து விடக்கூடாது.

1928ஆம் ஆண்டு பெரியார் எழுதியுள்ளதை இன்றைக்கும் நினைவுபடுத்துவது போல பல நிகழ்வுகளை அனுபவரீதியாக நாம் காண முடிகிறது.

தி.மு.க. ஆட்சியில்தான் 1989ஆம் ஆண்டு பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. அது கூட 1929ஆம் ஆண்டு செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை 60 ஆண்டுகளுக்குப் பிறகு, நான் செயல் வடிவம்கொடுத்து சட்டமாக்கி அறிவித்து, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதாகும்.

வேலை வாய்ப்புகளில், அரசு உத்தியோகங்களில் பெண்களுக்கு 30 சதவிகிதம் வழங்கும் சட்டமும் நமது ஆட்சிக் காலத்தில்தான் 1989ஆம் ஆண்டில் தான்!

பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி; உள்ளாட்சி அமைப்பு களில் மகளிருக்கு 33 சதவிகித இடங்கள் ஒதுக்கீடு செய்தது மட்டுமல்ல; அதனை நடைமுறைப்படுத்தி தேர்தல்களை நடத்தி முடித்ததும் நமது ஆட்சிக் காலத்திலேதான்; ஆம், 1996லே தான்!

இதிலேதான் பெரியாரின் கருத்தை நாம் நினைத்துப் பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்டது என்றால் அது மிகையல்ல!

உள்ளாட்சி மன்றங்களில் 33 சதவிகித அடிப்படையில் ஆயிரக்கணக்கான இடங்களில் மகளிர், பதவிப் பொறுப்புக்கு வந்துள்ளனர்; தேர்தல் வாயிலாக!

ஆனால் அந்தப் பதவிகளில் முக்கிய பொறுப் புள்ளவற்றில் நிர்வாக ரீதியாக – பெண்கள் அதி காரம் செலுத்த வேண்டிய நிலையை மாற்றி; பின்னணியில் அவர்களின் கணவர்கள் கோலோச்சும் நிலைகளும் உருவாகியுள்ளன.

இதில் எங்கிருந்து பெண்ணுரிமை நிலை நாட்டப் படும்? எங்கிருந்து மகளிர் விடுதலை முகிழ்க்கும்?

“நீ உட்கார்ந்து கொள் நாற்காலியில்! – அதிகார கடிவாளம் மட்டும் என் கையில் இருக்கட்டும்” என்று கூறுகிற ஆடவர்களால் – பெண்களின் முன்னேற்றம் நடை போடுமா? அல்லது தடைப்படுமா?

இதனை உணர்ந்துதான் 75 ஆண்டுகளுக்கு முன்பே, ஆண்களினால் பெண்ணுரிமை தடைப்படும் என்பதை பெரியார் விளக்கியிருக்கிறார்.

அந்தத் ‘தடை’ இன்னமும் தலைதூக்கியிருப்பதை நாம் காண முடிகிறது!

தடை உடைக்கிறோம் என்கிற பெயரால் ஆண் வர்க்கத்தை அறவே ஒழித்து விடவோ; அது போல பெண் இனத்தை அறவே அழித்துவிடவோ; எவரும் யோசனை சொல்ல மாட்டார்.

அது நடக்கவும் நடக்காது – நடக்கவும் கூடாது!

ஆனால் இந்த இரண்டு வர்க்கமும் அதாவது ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் சமரில் ஈடுபட்டு, பெண்ணுரிமை, பெண் விடுதலை போன்ற வெற்றிகளை எய்துவதை விட; இரு வர்க்கமும் சமத்துவ நிலையைக் கடைப்பிடித்து அவரவர் உரிமையை அவரவர் பாதுகாத்துக் கொள்ள முன்வரவேண்டும். அதற்கு இருவர்க்கத்தினரும் ஒருவருக்கொருவர் பக்கத்துணையாக இருத்தல் வேண்டும்.

வரும் டிசம்பர் 15ஆம் நாள் சென்னையில் நடை பெறும் கழக மகளிர் கருத்தரங்கில் விவாதிக்கப்படும் விஷயங்களில் இதுவுமொன்றாக இருக்கும்.

1.12.2002 அன்புள்ள,
முரசொலி **மு.க.**





# கழக மகளிர் கருத்தரங்கம் (2)

பெண்ணுரிமை பற்றித் தீவிர கருத்துக் கொண்டிருப்போர் சிலர்; திருக்குறள், பெண்ணடிமைத் தனத்தை ஊக்கப்படுத்துவதாக ஒரு குறை கூறுவதுண்டு.

அப்படிக் குறை காணும் நிலைமை குறளுக்கு வாய்த்ததுகூட, குறளுக்கு உரை கண்டவர்களால் தான் என்பதை ஏற்கனவே நான் சுட்டிக் காட்டியிருப்பது மட்டுமல்ல;

அந்த உரைகள் எப்படி அமைந்திருக்க வேண்டு மென்பதற்கும் உரை எழுதிக் காட்டியிருக்கிறேன்.

தெய்வத்தைக் கூட தொழாமல் கணவனைத் தொழுது எழுபவள், பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்ற உரையை மாற்றி;

“கடவுளைக் கூட வணங்காமல் கணவனை வணங்கி எழுகிற பெண்மணி; பெய் என்று நினைக்கிற நேரத்திலே பெய்கிற மழைக்கு ஒப்பானவள்” என்ற கருத்தில் குறளோவியம் தீட்டினேன். ஆனால் நானே “குறள் உரை” எழுதி வெளியிட்டபோது, அந்த நூலில் – நான் எழுதியுள்ள உரை வருமாறு :–

"கணவனைக் கடவுளைவிட மேலானவனாக நினைத்து, அவனையே தொழுதிடும் மனைவி; "பெய்" என்று ஆணையிட்டவுடன் அஞ்சி நடுங்கிப் பெய்கின்ற மழையைப் போல தன்னை அடிமையாக எண்ணிக் கொள்பவள்"

இப்படி உரை கூறி, ஆணுக்குப் பெண் அடிமையாக இருப்பதைச் சுட்டிக்காட்டி, அந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்பதற்காக இயற்றப்பட்ட குறள்தான் அது என்பதை எடுத்துக்காட்டி யிருக்கிறேன்.

"இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்"

இந்தக் குறளுக்கு இதுவரையில் பழைய உரையாசிரியர் பலரும், எழுதியுள்ள உரை என்ன?

"துணைவிக்கு அஞ்சி வாழ்கிறவன், நல்லவர்களுக்கு எப்பொழுதும் நன்மையான கடமைகளைச் செய்வதற்கு அஞ்சுவான்"

இந்த உரையின்படி பார்த்தால் மனைவிக்குப் பயந்து மணாளன் நடக்கக் கூடாது என்ற ஆணாதிக்கம், திருக்குறளில் கொடிகட்டிப் பறப்பதாகத் தோன்றும்!

ஆனால் பொருத்தமான உரை கண்டால்; அப்படியொரு 'பொருத்தம்' என்ற பெயரால் குறளை மாற்றி அமைக்க முயற்சிக்காமல்; குறளில் இருக்கும் சொற்களுக்கே பொருள் கண்டு உரை எழுத வேண்டும் என நான் எண்ணியதற்கேற்ப எழுதப்பட்ட உரை வருமாறு:–

"நல்லோர்க்கு நன்மை செய்வதில் தவறு ஏற்பட்டு விடக் கூடாதே என்று அஞ்சுகிறவன், தவறு நேராமல் கண்காணிக்கும் மனைவிக்கு அஞ்சி நடப்பான்"

மனைவிக்குப் பயந்து நல்லவர்க்குக் கூட நன்மை செய்யத் தயங்கிக் கிடக்கிறான் என்கிற உரையின் மூலம்; மனைவி, மகா கொடுமைக்கார பாத்திரமாக சித்தரிக்கப்படுகிறாள்.

ஆனால் என்னுரையில்; குறளுக்குப் பொருத்த மான உரை காணப்பட்டதால் – பெண்ணின் பெருமை நிலைநாட்டப்படுகிறது!

எனவே; ஆண்கள் பெண்கள் எனப்படும் இருபாலாரிடத்தும் தக்காரும் உண்டு; தகவிலாரும் உண்டு!

அவர்களில், தக்கார், மேலோர்! – தகவிலார், கீழோர்! – எனத் தகுதி பிரிக்க வேண்டுமேயல்லாமல்; ஆண்கள் என்பதாலேயே உயர்ந்தோர் – பெண்கள் என்பதாலேயே தாழ்ந்தோர் எனத் தரம் பிரித்தல் கூடாது.

"மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது"

இந்தக் குறளுக்கும் பழைய உரைகள் பல; இல்லத்தரசியை இழிவுபடுத்தக்கூடிய வகையிலேயே அமைந்துள்ளன.

"மனைவியிடம் அன்புகொண்டு அவள் சொற்படி நடப்பவர், சிறந்த பயன்களை அடைய முடியாது.

கடமையைச் செய்திட விழைவோர்க்கு வேண்டாதது அதுவே ஆகும்"

இந்த உரைக்கு மாறாகவும்; ஆனால் குறளைச் சிறிதும் சிதைக்காமல் சரியான உரையாகவும் நான் எழுதியுள்ளது வருமாறு :–

"கடமையுடன் கூடிய செயல்புரியக் கிளம்பியவர்கள், இல்லற சுகத்தைப் பெரிதெனக் கருதினால் சிறந்த புகழைப் பெற மாட்டார்கள்"

இந்த உரையில் இல்லற சுகமே கூடாது என்று வலியுறுத்தப்படவில்லை. ஆற்ற வேண்டிய கடமையை விட அந்தச் சுகம் பெரிது என கருதி விடக் கூடாது என்றுதான் சுட்டிக் காட்டப்படுகிறது. மனைவி சொற் கேளேல் என்று இந்தக் குறள் உபதேசமொன்றும் செய்யவில்லை.

"திருக்குறள் கலைஞர் உரை" என்ற நூலை தமிழறிஞர் அ.ச.ஞானசம்பந்தம் வெளியிட்டார். அந்த நூலுக்குப் பதிப்புரை எழுதிய புலவர் திரு.மா.நன்னன் அவர்கள் 'பெண்வழிச்சேறல்' என்ற அதிகாரம் குறித்து எழுதியுள்ள குறிப்புகளை நினைவூட்ட விரும்புகிறேன். அந்தக் குறிப்புகள் வருமாறு :–

"கொடிமுந்திரிப் பழத்தை (அது தனக்குக் கிட்டாதென்பதால்) மறக்க விரும்பிய நரி அதற்காக அதை வெறுக்க முயன்று, 'சீச்சீ; இந்தப் பழம் புளிக்கும்' என்று கூறிய காரணத்தைப் போலவே பெண்ணின்பத்தை

மறக்க விரும்பியவர்கள் அதை மறக்க முடியாமையால் வெறுக்கத் தொடங்கி, அதற்காகவே பெண்ணை இழித்தும் பழித்தும் கற்பித்துப் பேசத் தொடங்கினர். இச்செயல் நாலடியார் போன்ற இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளது. அக்கருத்துக்காட்பட்ட பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களும் திருவள்ளுவரின் கருத்துக்கு மாசு விளையாமல் உரையெழுத இயலாதோ ராயினர்.அதன் விளைவே பெண் வழிச்சேறல் என்னும் அதிகாரக் குறள் பத்துக்கும் அவர்களால் தரப்பட்ட விளக்கமாக நிலைத்து விட்டது. திருவள்ளுவரின் கோட்பாட்டில் கோணல் ஏற்படுத்தும் இப்போக்கினை மாற்ற விரும்பிய கலைஞரின் பங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களுக்கும் கலைஞர் வகுக்கும் உரையை முறையே காணலாம்.

1. கடமையுடன் கூடிய செயல்புரியக் கிளம்பியவர்கள் இல்லற சுகத்தைப் பெரிதெனக் கருதினால் சிறப்பான புகழைப் பெறமாட்டார்கள்.

2. ஏற்றுக்கொண்ட கொள்கை யினைப் பேணிக் காத்திடாமல் பெண்ணை நாடி அவள் பின்னால் திரிபவனுடைய நிலை வெட்கித் தலை குனிய வேண்டியதாக ஆகிவிடும்.

3. நற்குணமில்லாத மனைவியைத் திருத்த முனையாமல் பணிந்துபோகிற கணவன் நல்லோர் முன்னிலையில் நாணமுற்று நிற்கும் நிலைக்கு ஆளாக நேரிடும்.

4. மணம் புரிந்து புதுவாழ்வின் பயனை அடையாமல் குடும்பம் நடத்த அஞ்சுகின்றவனின் செயலாற்றல் சிறப்பாக அமைவதில்லை.

5. எப்போதுமே நல்லோர்க்கு நன்மை செய்வதில் தவறு ஏற்பட்டுவிடக் கூடாதே என்று அஞ்சுகிறவன் தவறு நேராமல் கண்காணிக்கும் மனைவிக்கு அஞ்சி நடப்பான்.

6. அறிவும்பண்பும் இல்லாத மனைவி அழகாக இருக்கிறாள் என்பதற்காக மட்டும் அவளுக்கு அடங்கி நடப்பவர்கள் தங்களைத் தேவாம்சம் படைத்தவர்கள்என்று கற்பனையாகக் காட்டிக் கொண்டாலும் அவர்களுக்கு உண்மையில் எந்தப் பெருமையும் கிடையாது.

7. ஒரு பெண்ணின் காலைச் சுற்றிக்கொண்டு கிடக்கும் ஒருவனின் ஆண்மையைக் காட்டிலும் மான உணர்வுள்ள ஒருத்தியின் பெண்மையே பெருமைக் குரியதாகும்.

8. ஒரு பெண்ணின் அழகுக்காகவே அவளிடம் மயங்கி அறிவிழந்து நடப்பவர்கள் நண்பர்களைப் பற்றியும் கவலைப்பட மாட்டார்கள்; நற்பணிகளையும் ஆற்ற மாட்டார்கள்.

9. ஆணவங்கொண்ட பெண்கள் இடுகின்ற ஆணைகட்கு அடங்கி இயங்குகின்ற பெண் பித்தர்களிடம் அறநெறிச் செயல்களையோ, சிறந்த அறிவாற்றலையோ எதிர்பார்க்க முடியாது.

10. சிந்திக்கும் ஆற்றலும், நெஞ்சுறுதியும் கொண்டவர்கள் காமாந்த காரர்களாகப் பெண்களையே சுற்றிக் கொண்டு கிடக்கமாட்டார்கள்.

காந்தத்துக்கு ஈர்க்கும் தன்மையும் இரும்புக்கு அதனால் ஈர்க்கப்படுந் தன்மையும் இருப்பதுபோல், பொது வாகப் பெண்ணுக்கு ஆணை ஈர்க்கும் கவர்ச்சியும், ஆணுக்குப் பெண்ணின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டுப் பெண் வழிச் செல்லும் காம உணர்வும் உள்ளன.

இந்த அடிப்படையிற்றான் கலைஞர் வள்ளுவரின் பெண் வழிச்சேறல் எனும் அதிகாரத்தைக் காண்கிறார். அவ்வாறு கண்ட கலைஞர் தம் உரையின் வாயிலாகப் பழைய உரையாசிரியர்களால் பெண்மைக்கு ஏற்பட்டிருந்த பழியை நீக்கியுள்ளார்.”

உடன்பிறப்பே, மேற்கண்ட பத்து குறள்களுக்கான உரைகளும்; பழைய உரைகளிலிருந்து மாறுபட்டும், ஆனால் குறளிலிருந்து மாறுபடாமலும் இருப்பவையாகும்.

எனவே அந்நாள் உரையாசிரியர்கள், தங்களின் கருத்துக்கேற்பவே ஆணாதிக்கமும், புராணீகத் தாக்கமும் பளிச்சிடும் உரைகளை எழுதி, திருக்குறளின் உண்மை ஒளிதனை மறைத்திடத் திரைகளைத் தொங்கவிட்டனர். அது வாழையடி வாழையாகத் தொடர்ந்தது எனினும்; இன்று பெண்களின் கண்கள் திறந்திட மங்கையர் இனம் குறித்து குறள் கூறுவதாகச் சொல்லப்படும் மாசு மருக்கள் அகன்றிட; விளக்கங்கள் குவிகின்றன. விரிவுரைகள் விவேக உரைகளாக நிறைகின்றன. இந்த இனிய திருப்பம் குறித்தும் டிசம்பர் 15 கழக மகளிர் கருத்தரங்கில் விவாதிக்க இருக்கிறோம்; வாருங்கள் உடன்பிறப்புகளே என வாஞ்சையுடன் அழைக்கிறேன்!

2.12.2002 — அன்புள்ள,
முரசொலி — **மு.க.**





# கழக மகளிர் கருத்தரங்கம் (3)

நேற்றைய கடிதத்தில் திருக்குறள் "பெண் வழிச் சேறல்" எனும் அதிகாரத்தில் வரும் குறட்பாக்களுக்கு எழுதப்பட்ட பழைய உரைகள் பலவும் அய்யன் வள்ளுவப் பெருந்தகையின் கருத்துக்கும், அவர் இயற்றியுள்ள குறளுக்கும் மாறான வகையில் பெண்ணடிமைக்கு வழி வகுக்கும் வண்ணம் அமைந்துள்ளன என்பதை எடுத்துக்காட்டி, அந்தக் குறட்பாக்களில் எந்த மாற்றமும் செய்யாமலே உரிய பொருள் எதுவாக இருக்க முடியும் என்பதை அவற்றுக்கு நான் தீட்டிய உரையின் வாயிலாக விளக்கியிருந்தேன்.

ஓர் ஆணையும் பெண்ணையும் தனித்தனியே கணவன் மனைவி என்று கூறுவதை விடுத்து – இருவரையும் இணைத்தே "வாழ்க்கைத் துணை நலம்" என்று ஓர் அதிகாரமே திருக்குறளில் இடம் பெற்றிருக்கிறது. ஆம்; வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் துணையாக ஓர் ஆணும் பெண்ணும் அமைந்திடும்போழ்து, அவர்கள் வாழ்க்கைத் துணை நலமாகிறார்கள், பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு!

இந்த அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள 'தெய்வம் தொழாஅள்' எனத் தொடங்கும் குறளுக்கான விளக்கம், நேற்றைய கடிதத்திலேயே அளிக்கப்பட்டுள்ளதை அறிவாய்!

“கணவனை, கடவுளைவிட மேலாகக் கருதி அவனைத் தொழுது வணங்கும் மனைவி; பெய் என்று கூறினால் மழை பெய்யும்”

எனும் பழைய உரைப்படி எந்தப் பெண்ணையாவது சோதித்துப் பார்க்க; அந்த உரையெழுதியவர்களே முன் வருவார்களா? வரமாட்டார்கள்!

எனவேதான் அக்குறட்பாவுக்கு நான் எழுதியுள்ள பொருத்தமான உரையை நேற்றைய மடலில் குறிப்பிட்டிருந்தேன்.

இதோ; இன்னொரு குறளுக்கான உரை; மகளிர் நெஞ்சத்தில் நெருப்பெனக் கொட்டும் உரை –

“சிறைகாக்குங் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை”

இக்குறளுக்குப் பழைய உரை:–

“பெண்களைச் சிறை வைத்துக்காக்கும் முறையினால் என்ன பயன் உண்டாகும்? அவர்களல்லவா நிறை என்னும் பண்பால் தம்மைத் தாமே சிறப்பாகக் காத்துக்கொள்ள வேண்டும்?”

இந்தப் பழைய உரை மாதர் உள்ளத்தைப் பாதிக்கிறது என்பதற்காகக்கூட அல்ல; உண்மையான உரை எதுவாக இருக்குமென எண்ணி எழுதியுள்ள என் உரை வருமாறு :–

“தம்மைத் தாமே காத்துக்கொண்டு சிறந்த பண்புடன் வாழும் மகளிரை அடிமைகளாக நடத்த எண்ணுவது அறியாமையாகும்”

மற்றொரு குறள்;

“பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு”

இதற்கு அக்கால முதல் இக்காலம் வரை எழுதப்பட்டுள்ள பழைய உரைகள் எவ்வாறு அமைந்துள்ளன ?

“கணவனைப் போற்றி வணங்கி கடமையாற்றும் செயலில் ஈடுபட்டால்
அந்தப் பெண்கள், பெருஞ்சிறப்புடைய
மேல் உலக வாழ்வை அடைவார்கள்”

என்றே அமைந்துள்ளன.

ஆனால் இக்குறளுக்கான உரையாக நான்;

“நற்பண்பு பெற்றவனைக் கணவனாகப் பெற்றால், பெண்டிர்க்கு இல் வாழ்க்கையெனும் புதிய உலகம் பெருஞ்சிறப்பாக அமையும்”

எனக் கூறியிருக்கிறேன். வாழ்க்கைத் துணை நலம் என இணைத்துக் குறிப்பிடும்போது, மனைவியினால் கணவனுக்கு சிறப்பு என்பது போல – கணவனால் மனைவிக்கும் சிறப்பு என்றும் கருத வேண்டுமல்லவா ?

“புத்தேளிர் வாழும் உலகு” என்பதை மேலுலகம் என்று கொள்ளாமல், இல்வாழ்க்கையெனும் புதிய உலகம் என என்னுரையில் கொண்டுள்ளேன். (“புத்தேள்” என்பதற்கு ‘புதுமை’ எனவும் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது)

இதே அதிகாரத்தில் அடுத்தொரு குறள் :–

“புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார் முன்
ஏறுபோல் பீடு நடை”

இதற்குப் பழைய உரையில்; பழி – இல்லத்தரசி மீது மட்டுமே சுமத்தப்படுகிறது. அதாவது

“புகழைக் காத்திடக் கூடிய மனைவி அமையாத வர்க்கு அவரை இகழ்ந்து பேசக் கூடிய விரோதிகளின் முன்பு தலை நிமிர்ந்து காளைபோல் நடக்கும் பெருமிதமான நிலை இல்லை”

என்றே கூறப்பட்டுள்ளது. “இல்” என்பதற்கு மனைவியென்ற பொருளை மட்டும் எடுத்துக் கொண்டால்; அவளால் மட்டுமே புகழ் ஒழிந்து இகழ் ஏற்பட்டு விட்டது என்று கருதலாம்.

“வாழ்க்கைத் துணை நலம்” என்ற அதிகாரத் தலைப்பு அமைந்துள்ள நிலையில் “இல்” என்பதற்கு ‘மனை வாழ்க்கை’ என்ற பொருளும் பொருந்துகிறது. (அகராதியிலும் அப்படியொரு பொருள் இருக்கிறது)

எனவே மனை வாழ்க்கையின் உயர்வோ தாழ்வோ மற்றவர்களால் விமர்சிக்கப்படும்போது; அவற்றுக்கு மனைவியும் காரணமாக இருக்கலாம். கணவனும் காரணமாக இருக்கலாம். அந்த இருவரிடை விளைந்திடும் பூசல் காரணமாக மனைவாழ்க்கையின் மாண்புக்கு மாசு ஏற்படும்போது; மாற்றார் முன்னே அந்தக் குடும்பத் தலைவன் தலை நிமிர்ந்து ஏறு நடை போட இயலாது! இதற்கான பழியை அவன் மனைவி மீது மட்டும் போடக் கூடாது! மாசு படுவது இல்வாழ்க்கையின் புகழ் என்பதால் இருவரில் ஒருவர் அல்லது இருவருமே அப்பழியை ஏற்கத்தான் வேண்டும்.

எனவேதான்; இந்தக் குறளுக்குப் பின் வருமாறு உரை எழுதியுள்ளேன். அது; இது :-

"புகழுக்குரிய இல்வாழ்க்கை அமையாதவர்கள்,
தம்மைப் பழித்துப் பேசுவோர் முன்பு,
தலை நிமிர்ந்து நடக்க முடியாமல் குன்றிப்
போய் விடுவார்கள்"

இல்வாழ்க்கை அமைவது என்பது; ஆண் – பெண் இருவராலும்தான் என்ற ஒளிமயமான உண்மை இருக்கும் போது; அந்த வாழ்க்கை, புகழுக்குரியதாக அமைந்திடாமல், இகழ்ச்சிக்குரியதாகத் தாழ்ந்திடும் பொழுது இல்லறத் தலைவியை மட்டும் பழைய உரைகாரர்கள் பாழும் இருட்டில் தள்ளிப் பழிபோடுவானேன்?

பரிமேலழகர் காலம் முதல்; குறளுக்கு விருப்பு வெறுப்பு அடிப்படையில் விளக்கங்கள் வழங்கியதும்; அதனையொட்டியே பல உரைகள் தீட்டப்பட்டதின் விளைவும்தான் இது!

இதனை விரிவாக விளக்கி; விடுதலை பெறத் துடிக்கும் மகளிர்க்கான மணி விளக்குகளாக டிசம்பர் 15 சென்னையில் கழக மகளிர் கருத்தரங்கில் சமுதாயக் கருத்துக்களும், அரசியல் பொருளாதாரக் கருத்துக்களும் அறிவியக்க ஆய்வுகளும் கலை இலக்கியச் சிறப்புகளும், சரித்திரச் சான்றுகளும், விஞ்ஞானப் புதுமைகளும் விவாதிக்கப்பட இருக்கின்றன.

கருத்தரங்கில் கலந்துகொள்ளும் மகளிர், பயனுள்ள பல்வேறு தலைப்புக்களில் உரையாற்றிட இருக்கிறார்கள்.

மாநில அளவிலும், மாவட்ட ஒன்றிய, அளவிலும், கழக மகளிர் அணியை இயங்க வைப்பது குறித்தும் –

கிராமப்புறத்து மக்களுக்கும், நகர்ப்புறத்து மக்களுக்கும் நாட்டு நிலையை எடுத்து விளக்குவது குறித்தும் –

மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை ஆகியவற்றை வலுப்படுத்துவது குறித்தும் –

ஆங்காங்குள்ள மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை எவ்வாறு அணுகுவது என்பது குறித்தும் –

மூட நம்பிக்கை காரணமாக எத்தர்களால் மக்கள் ஏமாளிகளாக்கப்படுவது குறித்தும் –

கருத்தரங்கிற்கு வரும் மகளிர், தங்களின் ஆலோசனைகளை வழங்கிட இருக்கிறார்கள்.

கருத்தரங்கில் கலந்து கொள்வோர் முன்கூட்டியே ஒரு வாரத்திற்குள்ளாக தங்களின் வருகை குறித்துத் தலைமைக் கழகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3.12.2002 அன்புள்ள,
முரசொலி **மு.க.**





# கழக மகளிர் கருத்தரங்கம் (4)

கழக மகளிர் அணியின் பணி ஆர்வமுடன் நடைபெறுகிறது என்றாலும்; மேலும் சீரோடும் சிறப்போடும், ஆக்கபூர்வமாகவும் – அமைப்பு ரீதியாகவும் வளர்ச்சி பெற்ற நிலையில் தொடர்ந்து தொடர வேண்டும் என்பதற்காக; அமைப்பு ரீதியாகச் செயல்படும் கழக மகளிர் மட்டுமன்றி, அனைத்து மகளிரிடையிலேயும் அரசியல், சமுதாய அடிப்படையில், பகுத்தறிவு பரப்பிடும் முனைப்போடு நமது அணுகுமுறையும், அயராத பிரச்சாரமும் தொய்வின்றி நடைபெற வேண்டுமென நான் விரும்புகிறேன்.

முதுமைப் பருவமும், உடல் நலிவுற்று மெலிவுற்றுள்ள நிலையும் மகளிர் அணியின் தலைவியார் திருமதி பொற்செல்வி இளமுருகு அவர்களை அதிக நேரம் உழைத்திட இப்போதெல்லாம் அனுமதிப்பதில்லை. அவர்களின் நலன் கருதி; நாமும் அவர்களை ஓயாது ஓடியாடிப் பணியாற்றிட இடம் தருவதில்லை.

ஆனாலும் திராவிட இயக்கத்தில் மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தம் அம்மையாரும், டாக்டர் தர்மாம்பாள் அம்மையாரும், நீலாவதி இராமசுப்பிரமணியம் அம்மையாரும், ஈ.வெ.ரா. நாகம்மையாரும், ஈ.வெ.ரா. மணியம்மையாரும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியும்,

மீனாம்பாள் சிவராஜும், சத்தியவாணிமுத்து அம்மையாரும், குஞ்சிதம் குருசாமி அம்மையாரும், வை.சு.மஞ்சுளாபாய் அம்மையாரும், அலர்மேலு அப்பாதுரையாரும், என்.வி.என். புவனேசுவரி அம்மையாரும், விசாலாட்சி இராம சுப்பையாவும் தொடக்க காலத்திலிருந்து இந்த இயக்கம் வளர்வதற்கு ஆற்றிய தூய தொண்டினை, தொய்வுக்கு இடமேயின்றி சிறப்பும் பெருமையும் திகழ்ந்திட நிறைவேற்றிடும் ஆர்வம் இன்றுள்ள மகளிர் அணியின் தலைமைப் பொறுப்பிலிருப்போர்க்கு உண்டு.

பொன்னகையாயினும் மெருகு பூசுதல் தேவை என்பது போல – வைரக்கல்லாயினும் பட்டை தீட்டிடுவது தேவை என்பது போல இப்போதுள்ள மகளிர் அணியின் பணியையும் – ஆற்றலையும், மேலும் பயனுறத்தக்க வண்ணம் பரவலாக்கிட வேண்டுமெனத் தலைமைக் கழகம் விரும்புகிறது.

இன்றுள்ள உன் போன்ற உடன்பிறப்புகள் பலர் அறியமாட்டீர்கள்; வயதான தோற்றமும் – எளிமையான வெண்ணிறச் சேலையும் – வெட்டி விடப்பட்டு தோள் வரையில் தொடும் முடியும் – தோளில் ஒரு நீண்ட பையும் கொண்டு; வேகும் வெயிலானாலும், நோகும் கால்களானாலும், மழை பொழியும் வேளையானாலும் – நடைப்பயணமாகவே பெரும்பாலும் பல சிற்றூர் பேரூர்களுக்குச் சென்று எத்தனை ஏழைத்தாய்மார்களுக்கு மூவலூர் மூதாட்டியார் இரு கரம் நீட்டி இனிய உதவிகளைச் செய்திருக்கிறார்கள்.

வயதுதான் ஏறிக் கொண்டே போகிறதே தவிர, வாழ்விலே இன்னும் வசந்தம் வரவில்லையே என வாடிக் கொண்டிருந்த கன்னிப் பெண்கள் என்ன; கைம்பெண்கள் என்ன; ஆயிரக்கணக்கில் செலவிட்டுத் திருமணம் நடத்திக் கொள்ள முடியாமல் அல்லற்பட்ட ஆண்கள், பெண்கள் – இவர்களுக்கெல்லாம் நல்வாழ்வு அமைவதற்கு மூவலூர் மூதாட்டியார் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், அவற்றில் அவர் பெற்ற வெற்றிகளையும் அருகிருந்து கண்டவர்களில் நானும் ஒருவன். எண்ணற்ற சுயமரியாதைத் திருமணங்களை, கலப்புத் திருமணங்களை, விதவைத் திருமணங்களை, கணவனால் கைவிடப்பட்டோர் மறுமணங்களை அந்த அம்மையார் முன்னின்று ஏற்பாடு செய்து அவற்றை நிறைவேற்றி வைத்து சமுதாய சீர்திருத்தப் பணியாற்றியிருக்கிறார்.

மூவலூர் அம்மையார் மட்டுமல்ல; இயன்ற அளவு நான் பட்டியலிட்டுக் காட்டியுள்ள அந்த மங்கை நல்லார்கள்; இன்று போல் அன்றைக்குப் பயணம் நடத்திப் பிரச்சாரம் செய்வதற்குக் கூட வண்டிகள் வாகனங்கள் என வசதிகள் இல்லாத காலத்தில் நகரங்களை, கிராமங்களை வட்டமிட்டு வட்டமிட்டு, வளைய வந்து வளைய வந்து வற்றாத உழைப்பையும் வளமான கருத்துக்களையும் வழங்கி; மூடத் தனத்தால் முடங்கிப் போய்க் கிடந்த சமுதாயத்தின் முதுகெலும்பை நிமிர்த்தினர் எனும் வரலாற்றை மறக்க முடியுமா ?

அவர்கள் உள்ளிட்ட அவர்களது தலைமையில் மொழிப் போருக்காகவும் – சமுதாய விழிப்புக்காகவும் –

சிறைக்கோட்டம் புகுந்த பெண்டிரின் எண்ணிக்கை; ஆடவர்தம் எண்ணிக்கைக்குக் குறைந்ததா என்ன?

இன்னும் சொல்லப் போனால் குழந்தை குட்டிகளுடன் சிறை சென்றார்கள்! அவர்களில் ஒருவர் திருமதி புவனேசுவரி நடராசன். மறைந்த தம்பி என்.வி.என். சோமுவின் தாயார். கர்ப்பவதிகளாகக் காராக்கிரகம் சென்று அங்கேயே குழந்தை பெற்ற தாய்மார்களும் உண்டு! குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்துக் கழகம் நடத்திய அறப்போரில் ஆயிரக் கணக்கில் தமிழர்கள் சிறைக் கோட்டம் சென்றனர் எனினும் அவர்களில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவராக ஒரு பூரண கர்ப்பவதியும் இருந்தார், அவர்தான் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார்.

1938இல் நடைபெற்ற இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரின்போது நான் 14 வயது மாணவன்! என்னை அரசியலுக்கு அறிமுகப்படுத்தி, அண்ணா அவர்களிடமும் ஆரூரில் நேரில் அறிமுகப்படுத்திய அண்ணன் டி.என். இராமனின் தாயார் இராசம்மாள் அம்மையாரும், என் துணைவியார் தயாளுவின் பாட்டியார் ராஜாமணி அம்மையாரும் அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சென்னை வந்து மறியல் செய்து சிறைப்பட்டவர்கள்.

பெரியார், காங்கிரஸ் தலைவராக இருந்த காலத்தில் தமிழகத்தில் காங்கிரஸ் சார்பில் நடத்தப்பட்ட ஒரு போராட்டத்தை நிறுத்தி வைக்க, காந்தியடிகளிடம் அன்றிருந்த சர்க்கார் கூறியபோது "அது என் கையில்

இல்லை. ஈரோட்டில் உள்ள நாகம்மையார், கண்ணம்மை எனும் இரண்டு பெண்களின் கையில்தான் இருக்கிறது" என்று காந்தியடிகள் பதில் அளித்தார் என்பது வரலாறு!

இந்தியப் பிரதமரின் எமர்ஜன்சியை எதிர்த்து சென்னையில் கறுப்புக் கொடி காட்டியபோது போலீசாரின் அடக்குமுறை காரணமாகக் கழக இளைஞர்கள் தீனன் போன்றவர்களின் பிணங்கள் வீழ்ந்தன. அப்போது நானும் நமது பேராசிரியர் அவர்களும் தளபதி வீரமணி அவர்களும் மழையெனப் பொழியும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு மத்தியில் களத்தில் நிற்கிறோம். எங்களுடன் அன்னை மணியம்மையாரும் அஞ்சாத பெண் சிங்கமாக நின்று கொண்டிருந்தார். அனைவரும் பின்னர் கைது செய்யப்பட்டோம்.

தன் கணவர் இளமுருகுடன் கைகோத்துக் கொண்டு, கழகத் தளகர்த்தர்களாம் முத்துக் கிருஷ்ணன் போன்றவர்கள் அணி வகுத்திட; ஒரு போர்க்களம் போலவே குளித்தலையில் **1957**ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் என் வெற்றிக்காக உழைத்திட்ட வீராங்கனையன்றோ மகளிர் அணித் தலைவி பொற்செல்வி அம்மையார்.

**1938** இந்திப் போரின்போது அண்ணன் அழகிரிசாமி தலைமையில் திருச்சியிலிருந்து சென்னைக்கு நடைப்பயணமாக வந்த இந்தி எதிர்ப்பு அணிவகுப்பில் மகளிர் சேனைக்குத் தலைமையேற்றவர்தானே மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தம் அம்மையார்!

தண்டவாளமெனப் பெரியாரால் அன்பாக அழைக்கப்பட்ட அண்ணன் ரங்கராசும், பெரியவர் எஸ்.வி. லிங்கமும் இணைந்து திருவாரூரில் இருந்து சென்னைக்கு தந்தி கொடுப்போம்; "பதினைந்து சேலைகள் அனுப்பப்பட்டுள்ளன" என்று! பதினைந்து பெண்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு வருகிறார்கள் என்று தந்தி கொடுத்தால் போலீஸ் உளவுத் துறையினர் இடையிலே அவர்களை கைது செய்து விடக் கூடும் என்பதற்காக; 15 சேலைகள் எனத் தந்தி மூலம் தெரிவிக்கப்படும்.

ஏராளமான பெண்களும் மொழிப்போரில் அப்போதே சிறைப்பட்டார்கள் என்பதற்காக அதனைச் சுட்டிக் காட்டுகிறேன்.

ஏன்; அண்மைக் காலத்திலேகூட தடாக் கைதியாக திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஓராண்டு காலம் ஒரு பெண் ஆட்சியில் மதுரைச் சிறையில் அடைபட்டுக் கிடந்ததை மறந்திட இயலுமோ?

இப்படி திராவிட இயக்கத் தமிழ் மகளிர்; களத்திலும் கலங்காமல் நின்று போர் முழக்கம் செய்து சிறையில் தவத்தையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

சமுதாய மறுமலர்ச்சிக்கும் வாதிட்டு சாதனை படைத்திருக்கிறார்கள். "பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் வழக்கம் தொடரட்டும்" என்று சட்டசபையிலேயே இருந்த ஓர் உயர் வர்க்க தேசியவாதத் தலைவர் வலியுறுத்திப் பேசியபோது; "வேண்டுமானால் உங்கள் வர்க்கத்துப்

பெண்களுக்கு பொட்டுக் கட்டி விடுங்கள்" எனச் சல்லடம் கட்டிக் கொண்டு சங்க நாதம் செய்து அந்த வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி என்ற நமது இயக்க உணர்வு கொண்ட அம்மையார் என்கிற போது எத்துணை பெருமிதம் ஏற்படுகிறது! எனவே அந்தத் தாய்க்குலத் தங்கங்களின் பெயரால் குறிப்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம், ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம், சத்தியவாணி முத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம், சத்தியா அம்மையார் குழந்தைகள் காப்பகங்கள் திட்டம், சிவகாமி அம்மையார் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், பங்காரு அம்மையார் மகளிர் குழுக்கள் திட்டம் ஆகிய மகளிர் நலத் திட்டங்கள் பலவற்றை கழக ஆட்சி நடைமுறைப் படுத்தியது. அவை இன்றைய ஜெயலலிதா ஆட்சியில் தீர்த்துக் கட்டப்பட்டு விட்டன.

மேலும் இன்று நடைபெறும் ஆட்சியின் அலங்கோலங்களை எதிர்த்து நமது மாநில மகளிரணி அமைப்பின் சார்பில், சற்குண பாண்டியன், வண்ணை தேவகி, நூர்ஜகான் பேகம், காரல் மார்க்ஸ், ராஜம் ஜான், டாக்டர் காஞ்சனா கமலநாதன், சங்கரி நாராயணன்,

திருப்பூர் சுலட்சணா, சாந்தா வெங்கடாசலம் ஆகியோரின் வழிகாட்டுதலுடன் மகளிர் அணியினர் உண்ணாவிரதம், மறியல், ஆர்ப்பாட்டம் போன்ற அறவழிக் கிளர்ச்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது எனினும்; மாநில அளவில் விரல் விட்டு எண்ணக் கூடிய நிலையில் இருக்கக் கூடிய வீராங்கனையர்களின் இந்த அணிவகுப்பு; மாவட்ட ஒன்றியங்களின் அளவிலும் பல்கிப் பெருகி "எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்று பாவேந்தர் பாரதிதாசன் அன்று பாடியது; இந்தத் தொலைநோக்குப்பார்வையுடன் தான் போலும் என உவகை கொண்டு, உற்சாக மேலிட்டு, ஆர்வமுடன் செயல்பட வருகிற எவரையும் புறக்கணிக்காமல் – ஒற்றுமையுடன் பணியாற்றி; ஒரு நூறு மலர்கள் – ஓராயிரம் மலர்கள் – ஒரு லட்சம் மலர்கள் – அல்ல; அல்ல – ஒரு கோடி மலர்கள் பூத்திருக்கும் தோட்டமாகக் கழகக் கோட்டம் விளங்கிடக் கருத்துக்கள் வழங்கிட; டிசம்பர் 15, சென்னைக் கழகக் கருத்தரங்கிற்கு வாரீர் என அன்னைக் குலத்தினரை – அருமை மகளிர் உடன்பிறப்புக்களை அன்புடன் அழைக்கிறேன்.

4.12.2002 அன்புள்ள,

முரசொலி **மு.க.**





# கழக மகளிர் கருத்தரங்கம் (5)

உடன்பிறப்பே,

சென்னையில் டிசம்பர் 15 காலை ஆரம்பமாகும் கழக மகளிர் கருத்தரங்கில் பின்வரும் தலைப்புகளில் மகளிர் உரையாற்றுகின்றனர்.

1. மகளிர் உரிமைப் போராட்டங்கள், 2. மூட நம்பிக்கையும் பேதைமையும், 3. சங்க கால மகளிர், 4. வள்ளுவத்தில் பெண்மை, 5.பெரியாரும்– பெண்ணுரிமையும், 6. அறிஞர் அண்ணாவின் எழுத்தில் பெண் உரிமை, 7. கலைஞரின் படைப்பில் பெண்ணினத்துப் பெருமை, 8. குடும்ப விளக்கும் தமிழச்சியின் கத்தியும், 9. திராவிட இயக்கத்தில் மகளிர், 10. இலக்கிய மறுமலர்ச்சியில் பெண்களின் பங்கு, 11. கலைஞர் அரசும் மகளிர் முன்னேற்ற திட்டங்களும், 12. அறிவியல் – மகளிர் பங்கு, 13. தொழில் துறையில் மகளிர், 14. கல்வித் துறையில் மகளிர், 15. ஆட்சி மன்றங்களில் மகளிர், 16. பெண்ணினத்தில் புதுமை விளைத்த பெருமாட்டிகள், 17. உலக வரலாற்றில் மகளிர் மாண்பு, 18. விடுதலைப் போர் வீராங்கனைகள்.

அளிக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஒரு தலைப்பில் ஒருவர்தான் பேச வேண்டுமென்பதில்லை. ஒரே தலைப்பில் இருவர் மூவர் கூடப் பேசலாம். ஒவ்வொருவரும் பத்து மணித்துளிகள் மட்டுமே தமது உரைக்கென எடுத்துக் கொள்ள வேண்டும்.

எந்தத் தலைப்பில் உரையாற்றிட விருப்பம் என்ற தகவல், டிசம்பர் 10ஆம்தேதிக்குள் தலைமைக் கழக முகவரிக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

யார் எந்தத் தலைப்பில் பேசுகிறார் என்ற விபரம் ஏடுகளில் 13ந்தேதியன்று வெளியிடப்படும்.

உரை நிகழ்த்த, விரும்பி எடுத்துக் கொண்ட தலைப்பு எதுவாயினும், அந்தத் தலைப்பிலிருந்து தடம் மாறாமல் கருத்துத் தவறு நேராமல் பேசும் ஆற்றல் படைத்தவர்கள் நிரம்ப உள்ளனர் என்பதை நானறிவேன்.

பொதுவாகவே காலவேறுபாடின்றி அந்தக் காலம் தொட்டே பொதுமேடைகளில் அரசியல் நாகரிகத்துக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் விடை கொடுத்து விட்டு; கைதட்டல்களுக்காகவே கணக்கிட்டுப் பேசுவோர் சிலர் இருந்தனர். இப்போதும் இருக்கின்றனர்.

அவர்கள் எக்கட்சியில் இருப்பினும் அவர்களை அண்ணா அவர்கள், நரகல் நடை அழகர் – நடுங்கா நாக்கழகர் – என்றும், சந்து முனை சிந்துபாடிகள் என்றும் 'வாழ்க வசவாளர்கள்' என்றும் குறிப்பிட்டு அந்தக் காலத்திலேயே 'திராவிட நாடு' வார இதழில் எழுதியிருக்கிறார்.

புளுகு மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுவது, பொய்களைத் தோரணங்களாகக் கட்டுவது; தனது கட்சித் தலைமைக்குத் தெரியவேண்டும், அதனால் பணமோ, பதவியோ உருண்டோடித் தன்னிடம் வர வேண்டும்; வரும் என்ற நம்பிக்கையில் நாராச நடைகளில் மேடைகளைக் களங்கப்படுத்துவோர், எத்தரப்பில் இருப்பினும் அவர்கள் ஓரங்கட்டப்பட வேண்டியவர்கள்தான்.

“நான் சாதாரணப் பேச்சாளனல்ல; எதிர்க்கட்சிகளின் தலைவர்களை நாக்கூசாமல் பேசவும், நன்றி மறந்து தரக் குறைவாகத் தாக்கவும்; உனக்கு இஷ்டப்பட்ட இராகத்தில் உனக்கு விருப்பமான சாகித்தியத்தைப் பாட வேண்டுமானால்; அதற்கு இருபத்தி ஐயாயிரம் ரூபாய் கொடு – எனக்குப் பதவித் தகுதி ஒன்று தனியாக இருப்பதையும் மதிப்பிட்டுப் பார்த்து நான் வரையறுத்துள்ள ‘ரேட்’டைக் குறைக்காமல் கொடுத்துவிடு” என்று பேரம் பேசி வாங்கிக் கொண்டு; மேடைகளில் வீரம் என்ற பெயரால் விரசம் பேசுகிறார்கள்.

இந்த பாணி; அவர்களுடனேயே இருக்கட்டுமென்றால் “இப்படிப் பேசுவது என்ன; ஒரு வழிப் பாதையா ?” என நமது கழகப் பேச்சாளர்கள் சிலர் நம்மைக் கோபித்துக் கொண்டு, அவர்களுக்கு மேடைகளில் பதில் சொல்லுகிறார்கள்! போலீஸ் வழக்குகளில் சிக்குகிறார்கள். ஆளுங்கட்சியினர் பேசினால் அது போலீசாருக்கு ‘ஆபாசப் பேச்சு’ என்று தோன்றவில்லை! “ஆ! – பாசப்பேச்சு!” என்று புகழ்ந்து பாடி அவர்களை ஆராதிக்கிறார்கள்!

ஆளுங்கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் நமது கழகத்தைப் பொறுத்தவரையில் கொள்கை விளக்கங்கள் அளிப்பதிலும், சாதனைகளை விரித்துரைப்பதிலும், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை உற்றுக் கவனித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதிலும், ஆளுங்கட்சியின் அடக்குமுறைகள், அராஜகங்கள் என்பனவற்றை சட்ட ரீதியாகவோ, மக்கள் சக்தியைத் திரட்டியோ அமைதி வழியில் சந்திப்பதிலும் அண்ணாவின் முறையையே தொடர்ந்து பின்பற்றி வருகிறது.

நாட்டு நிலையை மக்களுக்கு எடுத்துச்சொல்ல – படம் பிடித்துக் காட்ட – பேரியக்கமாக தி.மு.கழகம் திகழ்கிறது என்றாலுங்கூட அந்தப் பணி மேலும் சிறப்புறவும் – இல்லந்தோறும் ஆக்கரீதியாகப் பரவிடவும் மகளிர் அணியின் மகத்தான தொண்டு பயன்பட வேண்டும்.

அதற்கான வேர்களும் விழுதுகளும் எனத்தக்க வகையில்; கருத்தரங்கில் விவாதிக்கப்பட இருக்கிற எல்லாத் தலைப்புகளுமே அமைந்துள்ளன.

பேச்சுத் திறமை மட்டுமே மகளிர் அணிக்குத் தேவையென்று கருதி; செயல்திறன் காட்டி மக்களுக்குத் தொண்டாற்றும் கடமையிலிருந்து தவறி விடக் கூடாது – இதனை **1956**இல் நடைபெற்ற ஒரு விழா நிகழ்ச்சியில் நமது அண்ணன் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

'நம்நாடு' இதழில் வெளிவந்துள்ள அந்த நிகழ்ச்சி சுருக்கத்தை அப்படியே தருகிறேன்.

சென்னை, பெத்துநாயக்கன்பேட்டை, டி.டி.வி. உயர்நிலைப்பள்ளியில் மகளிர் மன்றத் துவக்க விழா **4–11–1956** அன்று நடைபெற்றது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அந்த விழாவிற்கு டாக்டர் தர்மாம்பாள் அம்மாள் அவர்கள் தலைமை தாங்கினார். திருமதி வெற்றிச் செல்வி அன்பழகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மகளிர் மன்றத்தினை மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் அவர்கள் துவக்கி வைத்தார்.

இருவருக்கும் பாராட்டிதழ்களை முறையே புவனேசுவரி நடராசன் அவர்களும், சத்தியவாணி முத்து அவர்களும் படித்தளித்தார்கள்.

பின்னர் மங்கையர்ச்செல்வி, சங்க காலத் தமிழ்ப் பெண்களின் நிலை குறித்தும், ஜகஜோதி நாகராசன், பெண்களின் முன்னேற்றம் குறித்தும், ஜி.பி. அமுதா பெண்கள் சமூகம் இந்த நாட்டில் நடைப்பிணங்களாக உலவுவதேன் என்ற தலைப்பிலும் மற்றும் மாணவி சற்குணமும், கமலா பாலசுந்தரமும், துரையம்மாள் சிவப்பிரகாசமும், அருண்மொழி வில்வமும் உரையாற்றினர். அண்ணா அவர்களின் துணைவியார் ராணி அண்ணியார் அவர்கள் மகளிர் மன்றம், லேடீஸ் கிளப் அல்ல என்ற தலைப்பில் பேசினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு:–

"நாம் சார்ந்துள்ள இயக்கம், மாதர் குலத்திற்கு உண்மையான விடுதலையையும், உரிய பெருமையையும் தேடித் தரும் இயக்கமாகும். மற்ற மற்ற இயக்கங்களுக் கெல்லாம், பெண்கள் விடுதலை பெற்றுப் பெருமையுற்றால் அதில் உள்ள ஆண்களுக்கு நஷ்டம். ஆனால், நமது இயக்கத்திற்கு, பெண்கள் முன்னேற்றம் பெற்றால் இலாபமே தவிர, பல வழிகளிலும் நஷ்டமேதுமில்லை. ஏனெனில் நமது இயக்கத்திற்கு எதிர்ப்பு கிளப்புவோர் முதலில் குடும்பத்திலிருக்கும்

பெண்கள்தான்; அந்தப் பெண்கள் நல்ல பகுத்தறிவு பெற்று, வீறு கொண்டு எழுந்து, விடுதலை உணர்வு கொண்ட வீராங்கனைகளாக மாறுவரேயானால், அது நமக்கு இலாபம் தருவதாகும்.

பொதுவாழ்க்கையில் என்னைப் போன்றவர்கள் சலிப்படையாமல் தொடர்ந்து ஈடுபடுவதற்குக் காரணம், என் வீட்டில் உள்ளவர்கள் என் போக்கிற்கு இடையூறு செய்யாமல் என்னோடு இணைந்து நிற்கக் கூடிய பக்குவத்தைப் பெற்றிருப்பதுதான்.

எனது துணைவியார், 'என்ன இயக்கமாம் இயக்கம்? என்ன வேண்டிக் கிடக்கிறது?' என்று, தனக்கு இதர பெண்களுக்கு கிடைப்பதைப் போன்ற வாய்ப்புகள் தனது வாழ்க்கையில் கிடைக்காமற் போனதை எண்ணிப் பேச முற்பட்டிருந்தால், எனது பொது வாழ்க்கைப் பயணம் இடையூறு மிகுந்ததாயிருந்திருக்கும்.

இந்த மகளிர் மன்றம் செய்ய வேண்டுவதென்ன?

அறிவைப் பயன்படுத்துபவர்களாக – உரிமை உணர்ச்சி கொண்டவர்களாக – நாட்டை மீட்கும் விடுதலை வேட்கை கொண்டவர்களாக நமது தாய்மார்களை ஆக்குவதற்குத்தான், இந்த மகளிர் மன்றம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று அடிப்படை நோக்கங்களை, தாய்மார்கள் அனைவரும் பெறுவார்களேயானால், அது, தாயக விடுதலைக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் பெரிதும் பயன்படுவதாகும்.

தாய்க்குலத்தவரை அந்த நிலைக்கு இழுத்து வரத்தான் மகளிர் மன்றம் பாடுபட்டாக வேண்டும். அதற்கு மகளிர் மன்றத்திலிருப்போர் தங்கள் திறமையை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கையை இழந்துவிடக் கூடாது. மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

மகளிர் மன்றத் துவக்க விழாவில் பலர் பேசக் கேட்டோம்; நன்கு பேசக் கூடிய – கருத்துக்களை எடுத்துரைக்கக்கூடிய ஆற்றலுடையவர்களைக் கண்டோம். ஆனால் பேசுவது மட்டுமே பணி என்று கருதிவிடக் கூடாது, மகளிர் மன்றத்தில் இருப்போர்.

இங்கே பேசும்போது ஒரு சிலருக்கு கஷ்டமும், வெட்கமும் இருப்பதைக் கண்டோம். ஆனால் அவர்கள் எல்லாம், தன்னம்பிக்கையை இழந்து விடாமல் மேலும் மேலும் முயற்சித்தால் நிச்சயம் நல்ல வகையில் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் ஆற்றலைப் பெற முடியும்.

நெல்லூருக்கு அருகே, கிராமம் ஒன்றில் ஆண் களோடு போட்டியிட்டு 22 பெண்கள் ஊராட்சி மன்றத்தைக் கைப்பற்றினர். அந்த ஊராட்சி மன்றம்

முழுவதும் பெண்கள் வசம். பெண்கள் தங்கள் சொந்தக் காரியத்தைச் சாதித்துக் கொள்வதிலேயே கண்ணாயிருப்பர் என்று கூறுவார்கள். ஆனால், நெல்லூர் கிராமப் பெண்கள் பொதுக்காரியத்தை கவனிப்பதில் பெரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் தாய்மார்கள், நாட்டுக்கான நல்ல காரியங்களில் வெற்றிகரமாக ஈடுபட முடியும் என்பதைத்தான் எடுத்துரைக்கின்றது."

இவ்வாறு **1956**ஆம் ஆண்டே – சுமார் **45** ஆண்டு களுக்கு முன் அண்ணா அவர்களின் வாழ்த்துடன் விழாக் கண்ட மகளிர் மன்றம்; இன்று மகளிர் அணியாக மலர்ந்து – கழக மகளிர் கருத்தரங்கையும் காண்கிறது என்கிற போதுதான் **45** ஆண்டுகாலத்துக்கான இந்த வளர்ச்சி; மகளிர் அணியைப் பொறுத்தமட்டில் போதாது என்றே கருத வேண்டியுள்ளது.

அந்த மனக் குறையைப் போக்க இந்தக் கருத் தரங்கு பயன்பட வேண்டுமென்று விரும்புகிறேன். பயன்படுமென்று நம்புகிறேன்.

**6.12.2002** அன்புள்ள,

முரசொலி **மு.க.**



தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை–18



ARASU ARTS